எடுத்துக்கொள்ளப்பட இருக்கின்றன என்பதனைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் *382*, திரு. சி. சண்முகவேலு, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

382—

திருமண மண்டபம்

***35853— திரு. சி. சண்முகவேலு:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாவட்டம், கொமரலிங்கம் பேரூராட்சியின் மையப் பகுதியில் பழனி தண்டாயுதபாணிசாமி தேவஸ்தானத்திற்குரிய நிலத்தில் ரூபாய் 30 லட்சம் மதிப்பீட்டில் திருமண மண்டபம் கட்டும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

கொமரலிங்கம் பேரூராட்சி பகுதியில், பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமாக 2925 சதுர அடி மனை உள்ளது. இதில் திருமண மண்டபம் கட்ட போதுமான இடவசதி இருக்குமா? முதலீடு செய்யப்படும் தொகைக்கு உரிய வருவாய் கிடைக்குமா என்பதைப் பரிசீலித்து திருமண மண்டபம் கட்டுவது குறித்து முடிவு எடுக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் கொடுத்தார்கள், என்னுடைய உடுமலைப்பேட்டை தொகுதியிலுள்ள கொமரலிங்கம் பேரூராட்சி என்பது 20 ஆயிரம் மக்கள் தொகை கொண்ட ஒரு

2003 மே 5]

பேரூராட்சியாகும். அந்தப் பேரூராட்சி முக்கியமான மெயின் ரோட்டில் உள்ளது. இங்கு சுற்று வட்டாரத்திலுள்ள, அருகிலுள்ள 32 கிராமங்களை உள்ளடக்கிய பகுதியிலே திருமண மண்டபங்கள் போதுமான அளவிலே இல்லை என்பதால் மேற்படி கிராம மக்கள் தங்களது இல்லத்தில் நடைபெறும் விசேஷங்களுக்கு மிகுந்த பொருட் செலவில் உடுமலைப்பேட்டை அல்லது பழனி நகருக்குச் செல்ல வேண்டியுள்ளது. எனவே மேற்படி கிராம மக்களின் நீண்டநாள் கோரிக்கையை நிறைவேற்றக்கூடிய வகையிலேயும், அதபோல அந்தத் திருக்கோயிலுக்கு வருவாய் அதிகமாகக் கிடைக்கக்கூடிய வகையிலேயும் அந்தத் திருக்கோயிலுக்கு வசூல் வருவதற்கு ஓர் இடம் தேவைப்படுகிறது. அந்த அடிப்படையில்--மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த கொமரலிங்கம் பேரூராட்சிப் பகுதியிலே, மையப் பகுதியிலே உள்ள இடத்திலே 2925 சதுர அடி உள்ளதாகக் கூறினார்கள்--அந்த இடம் போதுமான இடம், மெயின் ரோட்டிலே உள்ளது அதிலே, மேலே ஒரு தளம் கட்டக்கூடிய வகையிலே ஒரு திருமண மண்டபம் நடப்பு ஆண்டிலே கட்டித்தர முன்வருவாரா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொமரலிங்கம் பேரூராட்சி பழனியிலிருந்து 20 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. இந்நகரில் அருள்மிகு தண்டாயுதபாணிசாமி திருக்கோயிலுக்குச் சொந்தமாக உள்ள 2925 சதுர அடி இடம் திருமண மண்டபம் கட்டுவதற்குப் போதுமானதாக இல்லை என்று பொறியாளர்கள் சொல்லியிருக்கிறார்கள், இந்த இடத்தில் திருமண மண்டபம் கட்டுவதற்குப் போதுமான இடவசதி இருக்குமேயானால், அதுமட்டுமின்றி அந்தப் பகுதியிலே அறநிலையத் துறைக்குச் சொந்தமான இடம் வேறு இருக்குமேயானால் அந்த இடத்தை நீங்கள் தேர்வு செய்து கொடுப்பதற்கு முன்வருவீர்களேயானால் சம்பந்தப்பட்ட பொறியாளர்களிடத்திலே சொல்லி அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்து அதன் பின்னர் திருமண மண்டபம் கட்டுவது குறித்துப் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கலாம் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. சண்முகவேலு.

திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலே நஞ்சை பூமிகள் அதிகமாக உள்ளன.

[2003 மே 5

புஞ்சை பூமிகள் உள்ளன. நடப்பு ஆண்டிலே அங்குள்ள பூமிகளிலுள்ள பசலி வருமானம் எவ்வளவு என்பதையும், அதுபோல அங்கு உபயோகத்தில் எத்தனை ஏக்கர் நஞ்சை பூமி உள்ளது, எத்தனை ஏக்கர் புஞ்சை பூமி உள்ளது என்பதையும் தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சரிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இத்திருக்கோயிலின் பசலி *1412*-க்கான வரி விதிப்பு வருமானம் ரூபாய் *29* கோடியே *13* இலட்சத்து *46* ஆயிரத்து *389* ஆகும். மொத்த வருமானம் *56* கோடியே *63* இலட்சத்து *98* ஆயிரத்து *572* ரூபாய் *32* பைசா ஆகும். இத்திருக்கோயிலுடன் இணைந்த உபகோயில்கள் *41* இருக்கின்றன. இத்திருக்கோயிலுக்குச் சொந்தமாக *341* ஏக்கர் *14* செண்ட் நஞ்சை நிலமும், *1113.83* ஏக்கர் புஞ்சை நிலமும், அது தவிர *92* கடைகளும், *59* காலி மனைகளும் இருக்கின்றன. இருந்தாலும் சில பகுதிகளில் அந்த நிலத்தை உழுது கொண்டிருப்பவர்கள், சரியாக இன்னும் குத்தகை கொடுக்காத காரணத்தாலே வருவாய் மிகவும் குறைவாக இருக்கிறது. இருந்தாலும் அங்கே உங்களுடைய பகுதியிலே இருக்கின்ற நிலத்தினுடைய குத்தகைதாரர்களிடத்திலேயும் வருவாய் பெற்று வருகின்ற ஆண்டில் திருமண மண்டபம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் *383*, திருமதி வளர்மதி ஜெபராஜ், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்.

383—

சித்த மருத்துவச் சிகிச்சை

***37765—திருமதி வளர்மதி ஜெபராஜ்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்ட ஆட்சியர் வளாகச் சித்த மருத்துவப் பிரிவில் குறிப்பிட்ட நாட்கள் மட்டும் சிகிச்சையளிப்பதை மாற்றி தினமும் சிகிச்சை அளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?